# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௨௯ | திருவள்ளுவர் யாண்டு ௧௯௮௪ விசய—சித்திரை 1953—ஏப்பிரல் | மலர் ௧

## பொழிற்றொண்டர் கருத்துரைகள்.

**புத்தாண்டு.**

திருவருள் நலத்துடன் தோன்றியுள்ள இப் புத்தாண்டில் தமிழ்ப் பெருமக்களும், நம் சங்க உறுப்பினர்களும், பொழிலன்பர்களும், ஏனையரும் எவ்வகை நலங்களும் பெருகப் பெற்று நல்வாழ்வு வாழவேண்டுமெனப் பிறவா யாக்கைப் பெரியோன் திருவடி மலர்களை வணங்கி வாழ்த்தி வேண்டுகின்றோம்.

நம் தமிழ்ப் பொழில் 29-ஆவது துணர் மலரத் தொடங்குகின்றது. தமிழ்ப் பெருமக்கள் அன்பு நீர் பொழிய இத் துணர் பன்மலர் அழகுற மலர்ந்து நன்மணம் வீசி பொன்னொளி பரப்பி தமிழ் மக்கள் மனங்குளிர கண்டு மகிழும் வளமுடையதாய் விளங்குமென எண்ணி மகிழ்கின்றோம்.

**தமிழ் நாட்டு எல்லை.**

தமிழ் நாட்டு எல்லை குறித்து தமிழ்ப் பெருமக்கள் கருத்தினையும் எம் கருத்தினையும் முன் மலர்களில் வெளியிட்டிருந்தோம். சென்னை மாநகரம் தமிழருக்கே உரியது என்று இந்திய அரசியலார் கொண்ட முடிபு யாவருக்கும் பெரு மகிழ்ச்சி தருவதாம். என்றாலும் திருக்காளத்தி திருப்பதி, திருத்தணிகை முதலிய பெருந் தளிகள் உள்ளான வட பெண்ணை வரையிலுள்ள தமிழ்ப் பகுதிகளும், தமிழ் நாட்டில் சேரவேண்டும் என்ற தமிழ் மக்கள் வேண்டுகோளும் நிறைவேற்றுதற்கு உரியனவாம். இதனையும் இந்திய அரசியலார் பின்னும் கருதித் தமிழ் மக்களது முறையான எண்ணத்தை நிறைவேற்றி வைப்பார்களென்று நம்புகிறோம்.

வேண்டும் என்று கருதினேன். அப்பொழுது எனக்குமுன் கிடந்த யாப்பருங்கலக்காரிகைப் புத்தகத்தினை எடுத்துத் திறந்து நோக்கினேன். அதில்,

‘ இனமலர்க் கோதாய்! இலங்குநீர்ச் சேர்ப்பன்
புனைமலர்த் தாரகலம் புல்லு ”

என்னும் பாட்டு காணப்பட்டது. இப் பாட்டினுல் புல் என்பதற்குப் புன்மையே யன்றிப் புல்லுதல் (தழுவுதல்) என்று பொருளிருத்தலையும் உணர்ந்தேன். உணர்ந்து மென்? புல்லிற்கும் புறத்திற்கும் இயைபென்ன என்பதன்றோ என் ஐயம், அவ்வையம் இப்பாட்டால் விலக வில்லையே என்று கருதினேன்.

மாலைக் காலம் வந்தது. இவ்வினிய மாலைக் காலத்திலே வெளியே சென்று அழகிய இயற்கைக் காட்சிகளைக் காணுமல் வீட்டிலேயே அடங்கிக் கிடப்பது, தகுதியற்ற தலைவரின் தகுதியற்ற ஆணைக்கு ஓர் அறிஞன் ஏதோ ஒன்றினைக் கருதி அடங்கியிருத்தலைப் போலிருந்தது. காலங் கருதியிருந்த அந்த அறிஞன் தக்க காலத்திலே வெளியேறினுற் போல யானும் வீட்டை விட்டு வெளியேறி ஊருக்குப் புறம்பே வந்து பல இயற்கைக் காட்சிகளைப் பார்த்துக்கொண்டே சென்றேன். அப்பொழுதும் என் நெஞ்சு புல்லிதழ் புறவிதழ் என்று கூறிக்கொண்டே யிருந்தது.

யான் சென்ற வழியின் பக்கலில் புளிய மரமொன்று நன்கு பூத்திருந்தது. அதன் அண்மையில் சென்று ஒரு பூவைக் கிள்ளிப் புல்லிதழ் எவை என்று பார்த்தேன். அப்பூவின் புறத்தே நான்கு புல்லிதழ்கள் இருந்தன. இந்நான்கு இதழ்களும புறத்தேயிருப்பதனுல் இவற்றைப் புறவிதழ் என்று கூறலே பொருந்தும்; புலலிதழ் என்று கூறுவானேன்? என்று எனக்குள் வினுவிக் கொண்டு அலரும் பருவத்திலிருந்த புளியரும்பைக் கிள்ளி நோக்கினேன். உடனே எனது ஐயம் தீர்ந்து விட்டது. எனக்குண்டான உவகைக்கும் வியப்பிற்கும் அளவே யில்லை.

புளியரும்பிலுள்ள நான்கு புறவிதழ்களும் அவ் வரும்பின் உள்ளேயுள்ள அக விதழ்களைப் புல்லிக்கொண்டிருந்தன (மூடிக்கொண்டிருந்தன) அவ் விதழ்கள் புறத்தே நின்று அக விதழ்களைப் புல்லிக்கொண்டிருப்பதனுல் புல்லிதழ் என்ற காரணப் பெயரைப் பெற்றன. இது போன்றே தென்னை பனை முதலியவற்றின் புறத்தே யுள்ள காழ்ப் (வயிரம்) பகுதியானது உள்ளே யுள்ள சோறுபோன்ற மென்பகுதியைப் புல்லிக்

(2-ஆம் பக்கம் பார்க்க.)

# ஓலைச்சுவடியில் கிடைத்த பாட்டுகள்.

வித்துவான் திரு. அடிகளாசிரியர்,
(தி. ஆ. அ. தே. புலவர் கல்லூரி, கரந்தை,)

என்னிடத்தில் கிடைத்த ஏட்டுச் சுவடி யொன்றில் சிவப்பிரகாச சுவாமிகள் பாடிய 'அரனவனிடத்திலே' என்பது முதற் பாட்டாகவும்; 'ஐய நின்' என்பது இரண்டாம் பாட்டாகவும்; 'மைத்துன னளிப்பன்' என்பது மூன்றும் பாட்டாகவும்; 'தங்கமலை யொன்றுண்டு; என்பது நான்காம் பாட்டாகவும்; 'வீதிமுன் பாத்தோய' என்பது ஐந்தாம் பாட்டாகவும்; 'கவுரி கமலாய்' என்பது ஆறும் பாட்டாகவும் காணப்படுகின்றன. ஆனல் இது வரை தங்கமலை யொன்றுண்டு என்னும் பாட்டும்; வீதி முன் பாத்தோய என்னும் பாட்டும் கிடைத்ததில்லை. ஆகையால் அவ்விரண்டு பாட்டுக்களை மட்டும் கீழே தருகிறேன்.

தங்கமலை யொன்றுண்டு வெள்ளிமலை யொன்றுண்டு
        தழலோடு கையிலுண்டே

தழலூது குழலாயன் மைத்துன னளிப்பனிதி
        தானல்க தோழனுண்டே

பொங்கர வணிந்திடு பணம்பயிற் கல்லுண்டு
        பொன்மே லெழுத்தெழுதவோர்

புத்திரர் தன்கோடு கைக்கொண் டிருக்கையிற்
        பொற்பணி நிறுத்துரைக்கச்

செங்கபனி ரண்டுள்ள அறுமுகச் செட்டியார்
        செட்டிற்கு வாய்த்திருக்கக்

கங்குல்பகல் தட்டான்றன் வேலையிற் கூலிபல
கண்டுண்ண லாம்நஞ்சுணக்

கடைப்படோ மென்னவுமை நன்றுநன் றென்றுமகிழ்
கண்ணுத லுமைக்காக்கவே

வீதிமுன் பாத்தோய மூத்தமக னுண்டுநவ
வீரரும் பாவோடுவார்

மேவுநா லெல்லாந் திருக்கெடுத் தேதிரிய
வேலனென் றொருவனுண்டே

சாதியின் னுகர்குல நாட்டுப்பெ ணிருவருந்
தாருக்கு நானீயெனச்

சத்தசா கரமெலாம் நமதாக லால்நெய்
தறிக்குழிக் கிடமாகுமே

நீதிசெறி யண்டபகி ரண்டக் கடாகங்கள்
நெசவினுக் கேற்றவீடாம்

நிதியமே மிகவுடைய உத்திரத் தளகேசன்
நேயமிக அறுவைகொள்வன்

காதலொடு கைக்கோள வேலையிற் கூலிபல
கண்டுண்ண லாம்நஞ்சுணக்

கடைப்படோ மென்னவுமை நன்றுநன் றென்றுமகிழ்
கண்ணுத லுமைக்காக்கவே.

ஒருவர் தனக்கு இத்தகைய பெண் வேண்டுமென்று கேட்டதாய் ஓலைச்சுவடியிலிருந்து கிடைத்த பாட்டு.

"ஆசார முள்ளவ ளாய்ப்பெரி யோரை அறிபவளாய்க்
காசாசை சற்று மிலாதவ ளாய்நற் கருத்துள்ளளாய்க்
கூசாம லேவிழைந் தின்பா னுபவங் கொடுப்பவளாய்க்
ஈசா எனக்கொரு பெண்தரு வாய்கச்சி யேகம்பனே."

உ

ஸ்ரீ கருணாநிதியே நம:

## திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமது மகா சன்னிதானத்திற்கு அடியேன் திரு. பட்டாபி ராமன் தெண்டனிட்ட விண்ணப்பம்.

---

சுவாமிகளுக்கு நெடுநாளாய் மனுசெய்துகொள்ளவேண்டுமென்று எனதுள்ளத்தில் பொங்கிக் கொண்டிருந்த சிலவற்றை ஒரு செய்யுளிலமைத்து இத்துடன் அனுப்பியிருக்கிறேன். செய்யுளிசைக்கப் பயின்றவனல்லவாயினும், சன்னிதானத்தினுடைய பெருமையையுன்னி என் விண்ணப்பத்தைச் செய்யுளாகவே வரைந்தனுப்பிய துணிவை, மன்னிக்கக் கோருகிறேன். சிறுபொழுது தொடங்கி சதுரகராதி கிறிஸ்து மதத்தான் வீரமாமுனியெனத் தாமாய் தமிழில் பெயரிட்டுக் கொண்ட ரெவரெண்டு பெஸ்க்கி என்னும் ஊணர் ஒருவரால் செய்யப்பட்டதெனத் தெரிந்துகொண்ட பின்னர், அந்த புத்தகத்தினிடத்து ஞாயமல்லாததான ஒரு வெறுப்பு எனக்கு ஜனித்திருக்கிறது. அந்த அகராதி, திவாகரம், நிகண்டு இவைகளில் பொதிந்திருப்பனவற்றை வரிசைக் கிரமப்படிக்கு சேர்த்தெழுதியதாகமட்டு மிருப்பினும், செய்யுட்களில் பதத்துக்கு அர்த்தமில்லாத விடத்து வருத்தமின்றிப் பார்த்துத் தெரிந்துகொள்ள கற்போர்க்கு மிகவுமெளிதாயிருப்பதுபற்றி அப்புத்தகம் இக்காலத்தில் தமிழ் கற்கும் பாலருக்கு மிகவும் உதவியாயிருக்கிறது. இந்த புத்தகம் செய்யப்பட்டு இப்பொழுது நூற்றிநாற்பது வருடமாகிறது. இதுவரையில் தமிழ்ப் பண்டிதரொருவரும் இதைக்காட்டிலும் சிறந்ததென்று சொல்லத்தக்க வேறொரு அகராதியை இயற்றாது விட்டதும், வீரமாமுனிவரகராதி தமிழ் நாட்டில் நிலைத்ததும் எனக்கு அதிசயமாகவே இருக்கிறது. சமணர் செய்த திவாகரம், நிகண்டு முதலிய நூல்கள், விரைவாய் கல்வி கற்கப் பயிற்றுவிக்கு மிக்காலத்தில் பயன்படாதிருப்பதுபற்றி வீரமாமுனிவரகராதிக்கு ஏற்றம் வளர்ந்துகொண்டே போகின்றது. இதற்குவிசேட ஏற்றம் இல்லாதிருந்தபொழுதே அதை வெறுத்த நான், அதற்கிப்போது பல காரணங்களால் கௌரவம் விசேடப்படுவதைப் பார்த்து சந்தோஷிப்பேனா,

அவர்களுடைய பெயரும் கீர்த்தியும் நிலைக்கும். அந்தப் புத்தகத்தைச்செய்யும் உத்திரவாதத்தை ஏற்றுக்கொள்ளும் திருவாவடுதுறை ஆதீனத்திற்கும், அப்புத்தகம் முடிவுபெற முயலும் சன்னிதானத்திற்கும், விசேஷமகிமையும் கனமும் உண்டாகும். அப் புத்தகம் தமிழைக்கற்கும் யாவருக்கும் ஆதீனத்தினிடத்து நன்றியறிதலை விளைவிக்குமென்பதை ஒருவர் சொல்லவும் வேண்டுமோ. இப்படிப்பட்ட ஒரு அகராதி இயற்றப்படவேண்டுவது இக்காலத்தியற்கைக்கும் தமிழ் விர்த்திபெற்று நிலைப்பதற்கும் மிகவும் அவசியம் என்னும் கருத்து என் மனதில் எவ்வளவு ஆழ்ந்துதைத்திருக்கின்றனவோ அவ்வளவையும் சன்னிதானத்திற்குத் தெளிவாய்த் தக்க சொற்களினால் வெளியிட்டெழுதி விண்ணப்பஞ் செய்துகொள்வதற்கு என்னாற் கூடுமாயின் அகராதி இயற்றப்படுவது நிச்சயமே. இந்த விண்ணப்பம் எனக்குத் திருப்தியுண்டாகும் படியான வளவு திறமா யெழுதப்பட்டிருக்கவில்லை யாகையாலும் என் கருத்தை முழுவதும் வெளியிட என்னாலாகவில்லையாகையாலும் அகராதி தமிழர்க்குக் கிடைக்காவிடில் குற்றம் என்னதாகவே யிருக்கும். என்னாலும் வஞ்சனையில்லை. இயன்றமட்டில் முறையிட்டேன் காரியம் முடிவுபெறுவிடில் அது தமிழர் செய்த தௌர்பாக்கியம்.

தமிழரிலநேக சிறந்த வித்வான்களிருந்தும் செம்பாகமாய்ச் சொல்வளமுள்ளதாயும், கேட்பதற்கினிதாகவும் வாசிக்க விருப்பமுள்ளதாகவும், வாசிப்பவர் மனதைக் கவர்ந்து வாசிக்க வாசிக்க சந்தோஷத்தை யுண்டாக்கத் தக்கதாகவும், ஒரு பதைக்கத்தில் நவரத்தினங்களையும் எந்தவிடத்து எவ்வித ரத்தினம் பதித்தால் பதைக்கத்திலிருக்கிற ஒவ்வொரு ரத்தினத்திற்கும் இயற்கைப் பிரகாசத்தோடு செயற்கைப் பிரகாசமும் கலந்து உள்ளதற்கதிக அழகாய் இரத்தினங்கள் தோன்றுமோ, அந்தப்படிக்கு வாக்கியங்களில் சொற்களை அழகாய்ப் பொருந்தவமைத்து விஷயங்களைத் தேர்ந்தெடுத்து வசன நடையாய் எழுதப்பட்டிருக்கும் புத்தகம் ஒன்றாவது தமிழிலில்லையே. தமிழில் எதைவாசிக்கப் புகுந்தாலும் கவிகளாகவிருப்பது பற்றியும் அவைகளிலனேகம் நெறடுமுறடாகவிருப்பதினாலும், கவியின் தாத்பரியம் ஒன்றாகவிருக்க, சீர் அசை மோனை எதுகை இவைக்கிணங்க, செய்யுளைச் செய்ய வேண்டியதிருப்பதில் வித்துவான்கள் தாம் நினைத்தபடி தம் கருத்தை வெளியிடக்கூடாமல் யாப்பிலக்கண நிர்ப்பந்தத்திலகப்பட்டுத் தடுமாறிப் போயிருப்பதாலும் தமிழ்ப்புத்தகங்

களை எடுப்பதற்கே பயமாயிருக்கிறது. தமிழில் மொழி பெயர்க்கப் பட்டிருக்கும் பகவத்கீதை வடமொழி பகவத் கீதைக்கு முற்றும் வேறானதாகவும் பிரபோத சந்திரோதய மும் இன்னுமிப்படி மொழி பெயர்க்கப்பட்டிருக்கிற அநேக நூல்களும் மூலகிரந்தத்திற்கு ஒத்திராமலே யிருக்கின்றன.

துரைத்தனபாடை விசேடமாய்ப் பரவ ஆரம்பித்து யாருமதையே கற்கப் பயிலுமிக்காளில், பூர்வபுண்ணிய வசத் தால் தமிழில் மகாவித்துவான்கள் என்று பெயர் பெற்ற வர்கள், தமிழை யாரும் எளிதிற் கற்கும்படிக்கும அதை வாசிக்க உற்காகம் உண்டாகும்படிக்கும், தக்க நூல்களைச் செய்து தம் பெயரை நிலைநிறுத்தி தமிழ் பாடைக்குள்ள கனத்தை யுயர்த்தப் பிரையத்தனிக்காமல் காலங்கழிப்பது வெகு அநியாயமாகவிருக்கிறது. ஊணிப்பார்க்கில் குற்றம் அவர்களுதாகவு மிருக்கவில்லை அவர்களைப்பேணி உற்சாகப் படுத்துவோரில்லை. இக்காலத்து பாலியருக்கு எவ்விதமான புத்தகம் உபயோகமென்பதும் நம்முடைய வித்வான்களறி யார்கள். இக்காலத்து வித்தியார்த்திகள் ஆங்கிலேய பாடை யையும் கற்கவேண்டியிருப்பதால் பழம் பண்டிதர் கற்றபடி தமிழைக்கற்க அவர்களுக்குச் சாவகாசமில்லை. வடமொழி யில் வாக்கு சாதுரியமாய் செய்யப்பட்டிருக்கிற நாடகங்களில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து, மேற்சொல்லப் பட்டிருக்கிறபடி அழகாய்த் தமிழில் செம்பாகமான வசனநடையில் அமைத்து அச்சிட்டால், வித்துவான்கள் அவரளவாளுடைய திறமைக் குத்தக்கபடி செல்வவான்களா வார்களென்பதில் எனக்கெவ் வளவும் சந்தேகமில்லை. ஆங்கிலேய பாடையில் ஸர்-வால்ட டர்ஸ்காட் என்னும் மகாவித்துவான் ஒருவர் தன்னுடைய சுதேசசரித்திரத்தில், வீரரசம் கருணைரசம் விசேடமா யமைந்த சில அரசர் முதலியவரின் சரித்திரங்களைத் தேர்ந் தெடுத்து, உள்ளது உள்ளபடிக்கே சொல்வதோடு ஒவ்வொரு ரசமும் பூரணமா யொழுகும்படி வாக்கியங்களை யழகாய்க் கோர்த்து அநேக வசன-காவியங்களைச் செய்தனர். அவர் செய்த ஒவ்வொரு புத்தகமும் அவர் காலத்திலேயே அநேக

தடவை பதிப்பிக்கப்பட்டன. ஜனங்கள் அவைகளை வாசிக்க அவ்வளவு ஆவல் கொண்டிருந்தார்கள். இப்பவும் அந்த புத்தகங்களை அச்சிடுபவர்களுக்கு நல்ல லாபம் கிடைத்து வருகிறது. இந்தத் தொழிலில் அவருக்கு வருடமொன்றுக்கு கச0000-ரூபாய் கிடைத்து வந்ததாக தெரியவருகிறது. சென்னைப்பட்டினத்தில்-ய௰-வருடத்திற்கு முன் கவர்னராயிருந்த ஸர்-சார்லஸ்-டிரேவில்லியன் மைத்துனர் லார்ட்மெக்காலே என்பவர் எழுதிய சுதேச சரித்திரத்தின் இரண்டாவது பாகம்-உ௰௲-பிரிதிகள் அச்சிடப்பட்டு, இன்ன தெருவின் இடத்தில் விற்கப்படுமென்று பத்திரிகைகளில் பிரசுரஞ் செய்திருந்ததில் குறித்த தினத்தில் ஒரு ஜாமத்துக்குள்-உ௰௲ பிரிதிகளும் விலையாகிவிட்டன. அன்றைய தினத்தில் அந்த புத்தகங்கள் விற்கப்பட்ட தெருவில் மனிதர் நடப்பதற்கே கூடாதபடி ஜனக் கூட்டமாகவிருந்தது. சீக்கிரத்தில் அந்த புத்தகத்தை மறுபதிப்பு அச்சிட வேண்டியதாயிற்று. அவருக்கு புத்தகமெழுதுந் தொழிலில் அபரிமிதமான செல்வமுண்டாயிற்று. இப்படிப்பட்ட திருட்டாந்தம் ஹிந்துக்களுக்குள்ளும் இல்லாமலிருக்கவில்லை. கல்கத்தா சகலசாஸ்திர பாடசாலையில் க00-ரூபாய் சம்பளம் பெற்று வந்த சமஸ்கிருத வித்வானொருவர், பாடசாலை உபாத்தியாய வேலையை விட்டுவிட்டு வங்காளிபாடையில் அநேக நல்ல நூல்களியற்றி வருடத்திற்கு அ000-ரூபாய்க்கு அதிகமாகவே சம்பாதித்துக் கொண்டிருக்கிறார். தமிழ் வித்வான்களுக்குத்தானா இந்த கீர்த்தியும் சிறப்பும் இல்லாமற் போகவேணும். இதை நினைக்க உண்மையாகவே எனக்கு மேலும் மேலும் சங்கடமாகவிருக்கின்றது. இதைப்பற்றி எனக்குண்டாயிருக்கும் மனவேதையை தக்கபடி சொற்களால் வெளியிட என்னாலாகவில்லை.

தமிழ்நாட்டில் தமிழ்மொழி ஓங்காவிடில் பழிதமிழிற்கு மூலமான தமிழ்மடங்களைச் சேர்ந்ததாகவே இருக்கிறதென்பதை நான் சொல்லவேண்டுவதில்லை. இந்த தமிழ் நாட்டில் சுதேச பாடைகளில் தமிழ் தவிர மற்றெந்த பாடை

ஒழுங்குவதும் எனக்குச் சம்மதியில்லை. சங்கதிகளைச் சுருக்கமாயும், சொல்வோன் கருத்தைப் பூரணமாய் விட்டுப்போகாமல் விளங்கும்படிக்கும், ஆழ்ந்து மனதிற்றைக்கும்படிக்கும், சொல்நயம் பொருள்நயமமைத்து எழுதத்தக்க பாடை தமிழேயன்றி, வேறெந்தப் பாடைக்கும் இந்தச் சிறப்பில்லையென நான் பாலியத்தில் கேள்விப்பட்டதேயல்லாமல் அப்படிப்பட்ட கிரந்தங்களை இன்னம் நான் பார்த்ததில்லை. இப்படிப்பட்ட விசேடம் தமிழிற்கு இருக்கிறதென்பதை திருவள்ளுவநாயனார் குறள் செய்ததுபோல, வசனநடையிலும் இயற்றிக் காட்ட இன்னம் ஒரு தமிழ் வித்துவானும் துணியவில்லையே தமிழிற்கு ஆதாரமான மடாதிபரும் அதைப்பற்றி ஒரு பிரையத்தினமும் செய்யவில்லையே இது என்ன தௌர்ப்பாக்கியம். இந்தக் குறையை சன்னிதானத்திலல்லாது வேறு யாரிடத்தில் நான் முறையிட்டுக் கொள்ளுவேன். நான் துணிவா யெழுதியதை பொறுத்தருளவேண்டும். ஆனல் நான் சொல்வது உண்மையல்லாது வேறல்லவென்பது சன்னிதானத்திற்கு விளங்கவே விளங்கும். ஆங்கிலேய பாடையிலும் தமிழிலும் தேர்ந்த சில புத்திமான்கள் சென்னை நகரில் வசனநடையில், சில சிறு புத்தகங்களை அச்சிடுவிக்கிருர்கள். இவைகளில் அநேகம் ஆங்கிலேய நடைபோன்றதாக விருப்பதுபற்றி அவை அவ்வளவு சிறந்ததென்று சொல்லத்தக்கவையன்று. தாண்டவராய முதலியார் செய்த பஞ்சதந்திரச் சுருக்கமும், அஷ்டாவதானம் வீராசுவாமி செட்டியார் செய்த விநோதரஸமஞ்சரியும், செம்பாகமான நல்ல தமிழ் நடையில் எழுதப்பட்டனவாயினும், செட்டியார் இயற்றிய கம்பர் சரித்திரம் முதலியவற்றில், உண்மையை பிரயாசையேற்று ஆராய்ந்து நிச்சயிக்க சாவகாமில்லாமலோ, அல்லது சங்கதிகள் அகப்படாமலோ, கேட்கவினிப்பாயிருக்குமென்று அவருக்குத் தோற்றினவற்வையெல்லாம் சேர்த்து வரைந்து விட்டார். ஆகையால் அந்த நூலும் குற்றமொழிந்ததெனக் கூறுவதற்கில்லை. ஹிந்துக்களுடைய திரிமதங்களெவ்வொன்றின் கொள்கையை, வடமொழி நூல்களில் ஆராய்ந்து உண்மையான கருத்தையறிந்து அக்கருத்து எவ்விதத்திலும்

வேறுபடாதபடிக்கும், வாசிப்போர்க்கு அக்கருத்து வேறு விதமாய் அர்த்தமாகாதபடிக்கும், தமிழில் வசனநடையில் அமைத்துக் கொடுத்தால், ஆங்கிலேய மொழி வாசித்து ஒரு மதத்திலும் விசுவாசமில்லாமல் அலைகின்ற எத்தனை பாலர் களுக்கு ஒரு பெரிய ஆதரவாகவிருக்கும். அதுமாத்திரமா, நம்முடைய கொள்கையை அறிய மார்க்கமன்னியில் மதுரை வீரனையும், முனீஸ்வரனையும், சங்கிலிக்கருப்பையும், தெய்வ மெனக் கொண்டாடி காலங்கழிக்கும் எத்தனை பெயருக்கு உண்மையான ஞானத்தை விளைவிக்கும். தீட்சைபெற்று ஒரு ஜாமம் பூசை முதலியவற்றைச் செய்துகொண்டு தங்கொள்கை இன்னதென அறியாது இதரமதத்தர் ஹிந்துமதங்களைக் குற்றங் கூறிப்பழிக்குங்கால் சமாதானஞ் சொல்லத்தெரி யாமல் விழித்துக்கொண்டும், தமதுகொள்கை குற்றமுள்ளது தானேவென்று சந்தேகித்துக்கொண்டும் மனவுறுதியற்றுத் தியங்கும் எத்தனை பெயரைச் சமாதானம் செய்விக்கும். இந்த ஞானத்தை ஹிந்துக்களுக்குக் கற்பிக்குங்கடன் மடாதி பர்களுடைய தல்லாவிடில் மற்றெவருடையதாக விருக்கக் கூடும். இதிற்கண்ட தமிழர் முறையைத்தீர்க்க சன்னிதானம் முயன்றாற்போதும். காரியம் சித்தமாய் முடிவுபெறும் என் பதற்கென மனதிற் கிஞ்சித்தேனும் சமுசயமில்லை. தமிழ் மொழியின் இக்காலத்திய நிலையற்ற தன்மையையும், தமிழரில் பெரும்பான்மையோர் தத்தம் கொள்கைகளையறியாது மயங் கிக்கிடப்பதையும், இவ்வளவு துணிவாய் சன்னிதானத்தி னிடத்தில் முறையிட்டுக் கொண்டதை மன்னிக்கவேண்டும்.

இக்காலத்தில் தமிழ்மொழியை யபிமானிக்கும் பிரபுக் கள் வெகு கொஞ்ச பெயராயிருப்பதால் நாளுக்குநாள் தமிழ் குன்றிவருகிறது. ஆங்கிலேயபாடை வாசித்த சுதேசத் தமிழ்ப் பிரபுக்களும், மற்றவர்களும் ஒருவருக்கொருவர் எழுதிக்கொள்ளுங் கடிதங்களை ஆயிரம் பிழையுடனேயானு லும் இங்கிலீஷிலேயே எழுதிக் கொள்ளுகிறார்கள். ஒரு வருக்கொருவர் பேசிக்கொள்ளுகிறபோதும், இங்கிலீஷில் பேசுவதே அவர்களுக்குச் சம்மதம். இங்கிலீஷில் தேர்ச்சி

யில்லாவிடினும் அந்தப்பாஷையில் பேசுவதைப் பெருமையாக எண்ணுகிறார்கள். அப்படிக்கல்லாது, தமிழில் ஏதாவதொரு சமயத்தில் பேசும்படி நேரிட்டால், நாழி தமிழுடன் குறுணி இங்கிலீஷைக் கலந்து, தமிழை அலங்கோலப் படுத்துகிறார்கள். இப்படிக்கு அவர்கள் சேர்த்து பிரையோகிக்கிற இங்கிலிஷ் வார்த்தைகள் சந்தர்ப்பத்திற்கேற்றது, அல்லது ஏற்றதல்லவென்பதையும் யோசியாமலே துணிவாய் வழங்குகிறார்கள். இங்கிலீஷ் தெரிந்திருப்பது கனமென்றெண்ணுகிறார்களேயன்றி, தமிழில் பேசுவதற்குக்கூடத் தமக்குத் தெரியாமலிருப்பது குறைவென்று அவர்களுக்குத் தோற்றவேயில்லை. குழூக்குறியாயிருப்பனவற்றையும், துரைத்தனமுறைமையால் நிலைத்த வார்த்தைகளையும் வழங்குவதில் ஆக்ஷேபமொன்றுமில்லையாயினும், அவசியமில்லாமலே தமிழுடன் இங்கிலீஷ் வார்த்தைகளைக் கலந்து பேசுவதையும் எழுதுவதையும், நிதானித்து யோசித்தால் மிகவும் பரிகாசமாகவிருக்கிறது. மனதில் உதிக்கும் கருத்தை வாயினால் தமிழிற் சொல்லவாவது எழுத்தினால் எழுதவாவது, கற்றுக்கொள்ளாமலிருப்பது, தமக்கும் தம்மொழிக்கும் முறையே குற்றமென்றும் கனக்குறைவென்றும் அவர்களுக்குத் தோற்றவில்லையே. தமிழ் வார்த்தைகளின் உச்சரிப்பையறிந்து, பிழையில்லாமல் எழுத்துக்கூட்டி எழுதவும் வித்துவான்களாக இருப்பவர் தவிர, மற்றவர் கற்றறியார்களே. இது என்ன வெட்கக்கேடு, அவர்கள்தான் என்னசெய்வார்கள். அந்தக் காலதேச வர்த்தமானங்களுக்குத் தக்கபடிக்கு புதிதாயுண்டாகும் விஷயங்களைப்பற்றி மனதில் தோற்றத்தக்க தாத்பரியங்கள் வசனநடையில் தமிழில் எழுதப்பட்டிருக்கவுமில்லை அதைத் தமிழில் வாசித்துமறியார்கள். எனக்கு மிகுந்த இஷ்டரான ஆங்கிலேய துரையொருவர், மேற்கூறிய சங்கதியைப்பற்றி என்னைப் பரிகாசம் செய்து கெக்கலிக்கொட்டி நகைத்தார். தமிழைப்போற்ற வேண்டியவர்களுக்கே, தமிழினிடத்து இவ்வளவு கௌரவத்தாழ்வு விளைந்தது என்ன காலவிபரீதமோ அறியேன். ஆங்கிலேயருக்கு ஆங்கிலேய பாஷையினிடத்தும், துருக்கருக்கு துருக்க பாஷையினிடத்து மிருக்கிற

அபிமானத்தில், இலக்ஷத்திலொருபங்கு, தமிழருக்குத் தமிழினிடத்து உண்டானால், தமிழ் சீக்கிரத்தில் சிறப்புற்றோங்கும். ஆங்கிலேய பாஷையிற்றேர்ந்த ஜமீன்தாரொருவர் தமது ஸ்திரீக்கு, ஆங்கிலேயமொழி பயிற்றுவிப்பதாக என்னிடத்தில் சொன்னபோது, என்முகம் சுளித்திருந்ததுகண்டு உலக நடவடிக்கைகளையும் வர்த்தமானங்களையும் சுதேச மொழி மூலமாய் அறியக்கூடுமோ எனவினவினர். சுதேச மொழிகளுக்கு அப்படிப்பட்ட பெருமையை நம் பண்டிதர் உண்டாக்கவில்லை யென்னும் அவர்கருத்தை நானும் உண்மையென்றே ஒப்புக்கொண்டேன். இதனாலெல்லாம் தமிழை நிலைநிறுத்தி விர்த்திபெறச்செய்ய தமிழ் மடாதிபதிகளும், தமிழருமை யறிந்த திரவியவான்களும் பிரையத்தனிக்க வேண்டியது அவசியமென்பது சந்நிதானத்திற்குத் தோற்றாமலிருக்கமாட்டாது.

துரைத்தனத்தார் முயற்சியால் தமிழிற் குண்டாக்கப்பட்டிருந்த ஏற்றமும் இப்போது குறைவுபடத் துவக்கியிருக்கிறது. அரபி முதலிய இரண்டு மூன்று மொழிகள் தவிர உலகத்திலுள்ள மற்றெல்லாப் பாஷைகட்கும் ஆரியம் தாயாயிருப்பதுபற்றி, எல்லாச் ஜாதியாராலும் போற்றப்பட்டு வருகிறது. இப்படிப்பட்ட சிறப்பினையுடைய ஆரியம் இந்துக்களுடைய மொழியென்பது நம்மெல்லோருக்கும் கௌரவமான காரியம்தான். இங்கிலீஷ் மொழியினால் சீர்குலைந்து மகிமை குன்றியிருக்கும் தமிழ்மொழிக்கும் தமிழ்நாட்டில் சிறப்பேதாவது இப்போது இருக்குமாயின் அதையும் ஆரியம் அகியாயமாய்க் கொள்ளைகொண்டு போகும்போலிருக்கிறது. துரைத்தனத்தாரா லியற்றப்பட்டிருக்கும் பாடசாலைகளில் தமிழைக் குறைத்து ஆரியத்தை விசேடப்படுத்தத் துரைத்தனத்தார் உத்தேசித்திருக்கிறார்கள். ஆரியத்திற்குண்டாகும் பெருமையெல்லாம் நம்மதே யாயினும் காக்கும் பிரபுக்களின்றி சீர்குறைந்து தவித்துக்கொண்டும், இந்தியாவின் தெக்கணமுழுவதும் தன்றேசமாகவிருந்தும் ஏதோ சிலவிடங்களில் மாத்திரம் ஒன்றிக்கொண்டு மிருக்கும் தமிழ்ப் மொழிக்கு இருப்பிடமும் குன்றுவதற்குக் காலம் வந்ததேஎன மிகவும் சங்கடமாகவிருக்கிறது. ஆரியத்திற்குப் பெருமை எவ்வளவு உண்டாயினும் தகுமென்பது பக்ஷபாதமில்லாத

வழக்கெனினும், அதனால் தமிழ் குன்றுமெனவும் ஆரியத்தோடு பொருதி விஜயங்கொளத் தமிழ்ப் பாடையாலாகா தெனவும், பிறப்பினால் தமிழினிடத்து விசேட பக்ஷபாதமுள்ள, எம்போலியர்க்கும் தமிழைக் குன்றச்செய்வது எந்த மொழியெனினும் வெறுக்கத் தக்கதே தமிழைக் காக்க முயலும் தீரர்களில் இக்காலத்தில் ஆறுமுகநாவலரை முதன்மையாகச் சொல்லவேணும், மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை தமிழ் மடந்தை அவதாரமென்று சொல்லத்தக்க சமர்த்தராயினும், தமிழ் வாசக நடையைச் சிறப்பிவிக்கும்படியான கிரந்தம் ஒன்றும் அவர் இன்னம் செய்யவில்லை. அவருடைய மாணாக்கர் சோடசாவதானம் சுப்பராய செட்டியார் பதினோராந்திருமுறை தொல்காப்ய முதலியனவற்றை அச்சிடுவித்துத் தமிழை வுபசரிக்கிறார். மற்றொரு மாணாக்கர் தியாகராய செட்டியாருடைய புத்தி நுண்மையும் சாதுரியமும் தமிழிற்கு எப்போது உபயோகப்படப் போகிறதோ அறியேன். இவர்களில் யாராவது மேற்சொன்னபடி செம்பாகமான வசன நடையில் ஏதாவது ஒரு நல்ல நூலை இயற்றினால் அதை என் சொந்தச் செலவில் அச்சிட்டுத்தா எனக்கு வெகுசந்தோஷமாயிருக்கும். மற்ற வித்துவான்கள் நிஜத்தில் சுத்தமாயில்லாத குணங்களையும் சாமர்த்தியங்களையும், இருப்பதுபோல மானிடரைச் சிலாகித்து, கெஞ்சிப் பாடிப் புலம்புவதல்லாது, தமிழ்வாசக நடையை வளப்படுத்தித் தங்கீர்த்தியை நிலைப்பிவிக்க, வேணமட்டில் இடமிருக்கிற தென்பதை யறியவே அறியார்கள், அவர்களுக்கு இந்த ஞாபகமும் இல்லை. தமிழை விசுவசித்து நிலைப்பிக்கவேண்டியதைக் கடமையாகக்கொண்ட தமிழ்மடங்களின் ஆதீனகர்த்தாகளோ, தமிழை உபசரிக்கிறார்களென்கிற செய்தி வெளிப்படவில்லை. சுப்பிரமணியம் அகத்திய முதலிய பழய தமிழ் நூல்களை அச்சிடுவாரேயில்லை வாசிப்போர் எங்கிருந்து முளைப்பார்கள். தமிழைக் காக்கும் திறமை சன்னிதானத்தி லிருப்பதுபற்றி மனுப்பண்ணிக் கொண்டேன். ஆதுரமா யெழுதிய பிழையை மன்னிக்கக் கோருகிறேன்.

| | |
|---|---|
| திரிசிரபுரம்,<br>கலியுகம்-௪௯௭௭<br>யுவ௵ ஆவணி௴ ௨ | இங்ஙனம்,<br>அடியேன்,<br>திரு. பட்டாபிராமன். |

உ

ஸ்ரீ கருணாநிதியே நம:

## நேரிசையாசிரியப்பா.

---

திருமகள் விளங்குந் தீம்புனல் சூழ்ந் ... ... த
வயல்கடோறுநன் மணிநெற்கதிர்க ... ... ன்
செழுமையுற்றோங்குஞ் சிறந்தகாட்சியு ... ... ம்
கான்றோயாவினங் கன்றினையுன்னி ... ... ச்
சுரக்குந் தீம்பாற் றுளித்தூர் புகுவது ... ... ம்
குடகுமலைகளிற் குமுறு முகிலின ... ... ப்
பொழிவாங்காவிரி பொலிவுமதனி ... ... டை
ஆடவர் மங்கையராடுந் துறைகளு ... ... ம்
சத்துவகுணமுடைத் தவத்தோர் கூட்டமு ... ... ம்
சேர்ந்து துதிசெயுஞ் சிவவெனுமோசையு ... ... ம்
உழைக்கவலியிலா ஊனமானிடர் ... ... க்
குதவுதமிழ்மட முறுதிபெற்றிருப்பது ... ... ம்
பார்த்தவரெவரும் பாங்கென வியந் ... ... து
அவ்விடம் வசிக்க அவாகொளச்செய்யு ... ... ம்
சீர்மலிவளமிகு திருவாவடுது ... ... றை
ஏர்பெறச்செய்தே எளிதிற்பிராணிக ... ... ள்
வீடடைவழிதனை விளக்கியே காட்டு ... ... ம்
மகிமையைப்பெற்று மாருப்பெருமபெய ... ... ர்
நிலைக்கமுயலும் நிதியே எனக்கொ ... ... ரு
விண்ணப்பமதனை விருப்புடனேற் ... ... று
காரியமுடித்திடக் கருதுவையாகி ... ... ல்
நின்பெயர் தமிழ்ப்பெயர் நிற்குமிப்பாரி ... ... ல்
என்பதற்கைய மெவ்வளவுமில் ... ... லை
தமிழ்மயில் நங்கை தனக்குநீ துணையெ ... ... ன
விரும்பியிருந்தும் வீரமாமுனியெனு ... ... ம்
மேற்றிசை யூணன்வேறு மதத்த ... ... ன்
உன்ஸலோராட்லர் ஊணர் மூவரு ... ... ம்
அகராதிதனைப்புனைந் தவடனைக்கவர்ந்தன ... ... ர்

பொதியமாமலையிற் பூத்தவினை ... ... யே
அகத்தியனெனச்சீர் அணிந்தனளாதலா ... ... ன்
மீட்பதுன்கடனென மிகவும்வருந்தி ... ... ச்
சிறைபட்டிருப்பதைத் தீர்க்கநீயிலையே ... ... ன்
தமிழினிற்குனையலாற் கார்பெவர்தேரி ... ... ன்
நீகைவீடில்யார் நிலைக்கச்செய்பவ ... ... ர்
ஊணபாடை யுரங்கொண்டேதமி ... ... ழ்
னைந்துமெலிவதை நாமோபார்ப்ப ... ... து
சதுரகராதிநங் தமிழரல்லாதவ ... ... ர்
செய்ததைவிரித்துச் சிறப்புறப்பதங்களி ... ... ன்
அர்த்தவிகார மனைத்தையுமதனத ... ... ன்
பொருளொடுசேர்த்துப் பொருத்திக்காட் ... ... டி
மூதுரையுதாரண முறைமுறையுரைத் ... ... து
பதவரலாற்றைப் பழமைதொட்டிழுத் ... ... து
இன்னபாடையின், றிவ்விதமபிறப்பென ... ... ச்
சோதித்ததனைத் துலக்கிக்காட்டி ... ... ச்
சரித்திரமுறையாய்ச் சாற்றியப்பதம்ப ... ... ல
காலவியல்பின்படி கௌரவப்பட்டது ... ... ம்
அவ்வப்பதத்தினிற் க்ரமிலக்கணமுமுய் ... ... த்
துணர்ந்தாராய்ந்தே உலகவழக்கையு ... ... ம்
கோர்த்தேபகர்ந்து கொடுத்திடல்வேண்டு ... ... ம்
இஃதுமிகவெளி, தெனநான்பகரிலே ... ... ன்
மீனாக்ஷிசுந்தர, மேலோன்றமிழ்க்கு ... ... ச்
கம்பனைமீறும் கவிச்சிங்கமாயினு ... ... ம்
தமிழ்மடாதிபதி தயைபெறவில் ... ... லை
புராணம்பாடுமிப் புலவன்விருப் ... ... பை
மாற்றியேநின்னிடம் வசிக்கச்செய்துபி ... ... ன்
திரவியசகாயம், செய்துநீதேற் ... ... றி
தமிழ்நிலைநாட்டத் தனியாய்முயன் ... ... று
தம்பொருளனைத்தையுந் தமிழ்கே ஈந் ... ... து
தளராமனத்தொடு தலைமைபூண்டேயொ ... ... ரு
தேசாபிமானியாய்த் திகழுமணியா ... ... ம்
ஆறுமுகநா வலனையுமழைத் ... ... து
சோடசவதானி, சுப்பராயனு ... ... ந்

தமிழ்க்காளையையுஞ் சன்மானித் ... ... து
கோவிந்தனென்னும் குணமுடைக் கவிஞ ... ... ன்
றமிழினிற் சிறந்த சதுரனிவனையு ... ... ம்
சோமசுந்தரச் சுகிர்தன்றமிழரி ... ... ல்
நன்னெறிதவறா ஞானியுளொருவனு ... ... ம்
தமிழுமாரியமுஞ் சாலவோதினவ ... ... ன்
அடக்கமுடையோ னரும்புலவனையு ... ... ஞ்
சேர்த்தொருமித்துச் சீர்படவிருத் ... ... தி
அகராதிபுனை தலிவ்வைவர்கடனுக்கிம ... ... ற்
றேனையோர்தம்மை யிடையிற்சேர்த் ... ... து
தமதடியாரையும் தயையுடனே ... ... வி
வருக்கைவருக்கையாய் வாய்த்தபடிக்கு ... ... ப்
பெயராலொன்றைப் பிரித்துக்கொடுத் ... ... து
ஊக்கம்விடாது உறுதியாய்நின் ... ... று
முயன்றனையானால் மூவிருதுவி ... ... லோ
அல்லததற்கிரட்டத்தனை கால ... ... மோர்
பூர்த்தியாகிப் பூமியிலெங்குநி ... ... ன்
கீர்த்திவிளங்கிக் கேட்போ ... ... ா
கருணையென நின்சுழல் வாழ்த்துவ ... ... ரே

திரிசிபுரம்,
கலியுகம்-சகூளஎ,
யுவ௵ ஆவணி௴ ௨

இங்ஙனம்,
அடியேன்,
திரு. பட்டாபிராமன்.

# திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமது மகாசன்னிதானத்திற்கு விண்ணப்பம்.

---

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

---

இனியதமிழ் நாடெங்கு மீங்லீசுபாவிதமிழ்க் கேற்றமின்றிக்,
கனியகன்ற * மாபோலக் கைவடப்பெற் றிருப்பதையான் கண்டாற்றுதி,
முனியினுருக்கொண்ட வுன்றன் முன்றிலிடை முத்தமிழு முழங்குமென்றே,
தனியுறசுப் பிரமணியத்தேசிகா நினையன்று தரிசித்தேனே.

தரிசித்தவன்றுகண்டேன் றமிழ்மடந்தை தளிர்த்துலகிற்றன் பெயர்நாட்டி;
§ பரிசுபெற நினையடைந்து பலவாறாய் முயல்வதுவும் பாரின்மன்னர்,
தரிசிகாமணியே நீ தமிழ்மயிலைக் காப்பதுவுக் தமிழர்யார்க்கும்,
பொருவில்பாண்டியன் சோழன்சேரனென வயங்குமூனைப்புனிதனென்றும்,

அகராதி தமிழிவிணை யற்றதென வியப்புறவொன் றுன்றோர்யாரும்,
பகராதிருத்தலினிப் பாரிலுள தமிழ்மடப் பண்ணவர்கட்கெல்லாம்,
மிகராதிருக்குநெடும் பழியென்று முன்புகன்று நெடியசீட்டுத்,
தகராதிருக்குமொரு, இலுக்குழையி லிட்டனுப்பித் தளர்வாய்கின்றேன்.

தளர்ந்துருகிச்சமுசயத்தா லாற்றேனுய்த்திருமுகத்தைத் தரிசித்தேன்காண்,
வளர்ந்தோங்கு மதியுடையாய் ஞானிகட்கோர் நாயகமே வள்ளலேயுன்,
னெர்வசனத்தாற் றேர்ந்தேன் கெட்டியெனநிச்சயித்தேன் கேட்டுக்கொண்ட
வளம்வாய்ந்த வகராதி வருமென்றே றதிரும்பினன்காண் வனப்பின்மிக்கோய்

திரிபுரம், கலி-சகஎஅ,
தாத்ரு-ஞு புரட்டாசிமீ கசுஉ.

இங்ஙனம் அடியேன்,
திரு. பட்டாபிராமன்.

* மா—மரம்.

§ உலகத்தாரால் சிறந்தபாடையென்று மெச்சப்படுவதாகிய பரிசு.

---

II

# இலங்கை வேந்தரும் இராம தூதரும்.

திரு. K, சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

நீ யார்? இங்கு நிலவியதென்னே!
சேயார் திருமால் இந்திரன் தானே!
நான்முகனே? வுயிர் நனிபெருங் காலனே!
தேன்மொழி அந்தணர் செய்பெரு வேள்வியில்
ஆக்கிவிடுத்த அதிகொடு பூதமா!
வாக்கியல் மலரவன் இலங்கை முழுமையும்
சிதையெனத் திருத்திய திகிரித் தெய்வமோ!
ஊதைபோ லெழுந்து உயர்தூது வந்தநீ
ஏனிச் சோலையும் இலங்கை மாக்களும்
வீணேயழிய விரும்பினாய் என்கொல்!
இஃது தூதுவர்க்கேற்ற நற்குணமா!
எஃதும் நிறைந்து இயம்பிடும் மறையினில்
வல்லவனென்பதை வழிவழி யுணர்ந்தோர்
சொல்லிசை போகசோர் வினிலுற்றிடல்
என்னே நினது பேதைமை! இயம்புவாய்!
என்றன் தங்கை சூர்ப்பனகை யென்னும்
இன்புறு மொழியாட்கு இயற்றிய செய்கை
வன்புறு மானம் பொறாது, செய்தானை
கண்டிக்க அவனே கடுகவே சென்றாங்கு
கண்ணுறுததினால் காளைய ரிலங்கைக்கு
மீண்டு வரவே மிதிலைமாமகளை
கண்டு கொணர்ந்தேனென்றே அறிகுவாய்!
சோகமே கிட்டாதூய் மையுள் அசோக
வனத்திலம் மெல்லியல் மாண்புகருதி
மென்மைக்கும் செம்மைக்கும் வேறுபாடுறாது
நல்லியல் வாய்ந்த வீடணன் நங்கையாம்
மெல்லியல் கன்னியை விளங்கிடும் தோழியாய்
அமைத்ததின் அமைதியை நோக்கநீ அறிகுதி.
அதிலென்னதவறு? அன்னாள் தன்னை
மதிமயக்குற்று மாணெறி தவிர்த்து
தீண்டினாலல்லவோ தொட்ட குற்றமும்
காண்டகு பழியும் கண்டிடலாகும்,

கற்புக்கடம் பூண்டபொற்புடை மகளிரை
எற்றைநினைந்து நிலத்தொடு எடுத்தேன்?
அதனை அறியும் திறம்பாடறியாய்!
இதனைக் கருதா தெழுநூறு யோசனை
பரப்பினை யுடைய பல்லொளி மூதூர்
சிறப்பினை யறியாது சிதைத்து செருக்குற்றாய்!
இங்குள காட்சிகள் ஏனைய கரையில
தங்கியவாகலின் தனிப்பெருந் தோற்றத்தை
கண்டிடக் கட்புலன் வரம்பில வேண்டுமே!
தண்ணியல் நீங்கிய தவறுறு செயலை
எண்ணித் துணியாது இயற்றிய தேனோ?
வேதம் நான்கும் அங்கமாறும்
ஆதியாம் அறமும் ஐயம் திரிபற
ஆதித்தனிடத்து அறிவைமிகுத்து
ஓதியுணர்ந்த உறுபயன் இதுவோ!
என்னே நின்மதி ஏகிடும் தன்மை!
உன்றனின் உணர்வுமெய் ம்மைக்குவேலி
யென்னப் புகலும் இலக்கண மகன்று
குறும்பு கூத்தாடும் கொள்கை யனானாய்!
நன்று நன்றுன்னல மிலாமதியே!
நின்வலிக் கென்வலிநிலை குன்றியதோ!
என்வலி, நோன்பினியல் பினால் அறிவாய்!
பகைவரைத் தேய்க்கும் பான்மையன் நானென
தகையுடனுணர்தி! தருக்கியிங்கு நிற்போய்!
பேரும் உருவமும் கரந்துபோர் பெற்றியின்
நீருமை மறைத்தின் னிலமழிக்க வந்தனை!
யானோ தோள்வலி அடைந்தவ னென்றால்
தானே அம்மங்கை யிருந்த நிலந்தன்னை
மேலும் கீழும் எண்ணாழிகை யளவு
சாலககுடிலொடு தான்பெயர்த் தெடுத்ததால்
திண்ணியனென்று தெரிந்திடு நீயே!
பெண்ணாரணங்கின் திண்ணிய கற்பின்
நண்ணியதிறத்தை யான்நன் குணர்ந்ததும்
பொன்னாரிலங்கை யின்பொற்பை நீ அழித்ததும்
உன்னிடில் அறமிலான் யார்கொல் அறிவாய்!
என்றங்கைக் கிழைத்த கேட்டை யுன்னி
கன்றிய சினத்தனாய் காலனின் செயல்கொடு
வந்தனன் யானே! வகையிலாக் காதலில்
நொந்து வந்தவனென நோக்குவ தெங்ஙனம்!
காதலுடையனாய் கண்டிடின் கற்புடை
மாதர்தம் தனிமையில் மாற்றம் வந்திடின்
ஏற்றதன் கற்பினால் ஏதிலர் தன்னைதன்

ஆற்றலால் சாம்பராய் ஆக்குவ திண்ணமே.
அவ்விதம் என்பால் அடைவுருததினல்
செவ்வைய னென்பதை தெளிந்திலாய் நீயே!
அப்பெருஞ் சான்றேல் அறிவாய்இந் நிகழ்ச்சி
செப்பிடும் காமச்சீர் கேட்டினுலோ
மெய்ப்புறும் காலவேறு பாட்டினுலோ
வந்ததென்று வழங்குவாய்! இவணே!
இம்மொழிப் போக்கை எண்ணிடுங்காலே
மம்மர் கொள்காதலோ, வாழ்கடுஞ்சினமோ
எண்ணியுணர் வாயென் மனக்கண் ணுற்றது!
கற்பினுக் கணியள் யாரெனக் காண்குவாய்!
பொற்புறு மன்னன் இலங்கையின் பொய்கையில்
தாமரை யொன்றில் தங்கிய திருமகள்
சேமுறு கடலொலி சிலர்செவி கேட்ப
அன்னுரதனை எடுத்தென்னகங்கையில்
பொன்போற் போற்ற பொருந்த அளித்தனர்.
அக்கால் குணமுரைப்போர் அரும்பெருங் குழந்தை
தக்க யிங்கிருப்பது தகாதென்றனர்.
அச்சொற்கிணங்கி அரும்பெரும் பேழையில்
மெச்சுமிம் மகளை மேன்மையாய் கிடத்தி
பொங்கும் பொற்கடலிடை போகவிடுத்தேன்.
எங்கும் பரவும் அலையினே துவால்
மங்கையின் பேழைமா பெரும்மிதிலையன்
பொங்கொளி நிலத்து புகுந்து பொலிவுற்றதே!
அதனையறிந்த அருந்தவ யோக
பதமுடை சனகன் பார்த்தறிந் தெடுத்து
மேன்மை மிளிர வித்தகி தன்னை
தேனே! பாலோ! தெவிட்டாத முதென
வானேர் வியக்க வளர்த்திட நின்றுள்.
இலங்கை மாமகளே யாதலா லழைத்து
நலமுற கொணர்ந்தேன். நவின்றிடின் என்பிழை!
பகை பழிபாவம் அச்சம் என்பதின்
தகுதி இங்கு சார்ந்த தெவ்வாறு?
எக்குலத்திற் பிறந்தாரெவரே யாயினும்
தக்க நல்வினை தகாத தீவினை
எனவிரு பயனும் இயன்ற நீர்கோல
வாழ்வி லெல்லோர்க்கும் ஒரேநிலை வழங்கும்.
ஊழின் வலியது பிறிதொன்று யாது?
மலர்மிசை கடவுளின் ஈகைமொழி மாண்பின்
பலமதால் வீறுடை பண்பின னெனக்கு
மரைமிசை யார்வசை மருங்குள தென்பது
குறையென யுணர்ந்து கொண்டும் வசையின்

மீளாப் பழிக்கும் ஆளாக நின்றேன் !
அதனுன் வெகுளி மயக்க மாகிய
இதமிலா யிருட்பண் பின்பெருக் கெய்தியென்
சுற்றமும் வாழ்க்கையாம் சுழியினில் வீழ்ந்து
குற்றமும் அலமரும் கொள்கையு முற்றதே.
இத்தன் மையாவும் எளிதில் அறிவன்யான்.
வசைபல ஒன்ருய் வந்து ஊழின்கண்
இசைந் தோங்கி இலங்கை யுற்ருளே
இங்கு மீண்டும் கொணர வேகிற்று.
என்னே உன்றன் அறிவி னியல்பு !
பொன்னே போன்ற தூ துவன் செயலா
செய்தனே ! நீயதை தெள்ளிதின் அறிதி !
உய்யு முலகரால் உயர்புகழ் வில்லியின்
மெய்ம்மை யுணர்ந்து விளங்குறும் தூதனு !
பின்னேன் சொல்லே பெருமை யோடேற்று
முன்னேன் வாலிமேற் முழுகணை தனையே
செலுத்தி னர்க்கடிமை திறம் பூண்டுற்றனின்
வலியுடை பெருமை வரைதற் கடங்கா.
முற்றறி விலாது வாலியை முனிகொடு
பற்றுயிர் நீக்கிய பான்மையன் றனக்கா
பெற்றிகொள் மிதிலே முனிவன் பெட்பொடு
உற்று வளர்ந்த இலங்கை ஓவியமனுள்
நற்றுணை வாழ்க்கையாய் நண்ணு தலாகும் !
தூதாக வந்துநீ தொல்லிலங்கை மக்களேயும்
தாதாரும் தண்டமிழ் சோலேதனையு மழித்து
அடாத காரியம் அனைத்தையும் புரிந்தாய்.
விடாத உன்னேழை மதிக் கிரங்கி
நின்னைக் கொல்லோம் ! நீணிலமிரும் ! நீ
யுன்னி வந்ததை யுளத்தச்சம் கொளாது
சீரிய அறிவால் சோர்விலா துரைப்பாய் !

# திருவள்ளுவர் திருநாளும் அதனைக் கொண்டாடும் முறையும்.

---

பண்டிதர் கா. பொ. இரத்தினம். எம். ஏ., பி. ஓ. எல்.
தமிழ்மறைக் கழகத் தலைவர்.

வைகாசி அனுடத்தைத் திருவள்ளுவர் திருநாளாக யாம் கொண்டதற்குரிய காரணங்களை அறிதற்கு அன்பர்கள் சிலர் விரும்புகிறார்கள். ஆதலினால் முதலிற் சுருக்கமாகச் சில கூறுதும்.

திருவள்ளுவர் பெருமான் இவ்வுலகிற் றோன்றிய நாளையோ, 'பேரா இயற்கைப்பெரும் பேறெய்திய' நாளையோ அறிதற்குப் பொருத்தமான சான்றுகள் இல்லை. அவர் மறைந்த நாளைச் சிலர் மாசி உத்தரம் என்றும், வேறு சிலர் வைகாசி அனுடம் என்றுங் கருதி இவ்விரு நாட்களையுங் கொண்டாடி வருகின்றனர். இவற்றுள் ஒரு நாளை உலகம் முழுதும் கொண்டாடச் செய்வதோடு, அந்த நாளைத் தமிழ் மக்களுடைய வீடுகள் ஒவ்வொன்றிலுங் கொண்டாடவுஞ் செய்யவேண்டும் என்று எமது தமிழ் மறைக் கழகம் முடிவு செய்தது. இதனாலே இவ்விரு நாளிலே பொருத்தமானதொரு நாளை அறிவிக்கும்படி சங்கங்கள் சிலவற்றையும் அறிஞர்கள் சிலரையுங் கேட்டோம்.

திருக்குறளின் உயர்ந்த கருத்துக்களைப் பரப்புதற்குப் பல்லாற்றானும் தொண்டு செய்துவரும் **சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் ஆட்சியாளர் திரு. வ. சுப்பையா பிள்ளை** அவர்கள் பின்வருமாறு எழுதினார்கள். "அவர் (திருவள்ளுவர்) திருநாள் வைகாசி அனுடம் என்பதுதான் **மறைமலையடிகள்** போன்றார் கருத்து. அவ்வண்ணமே எங்கள் பஞ்சாங்கத்தில் வெளியிட்டு வருகிறோம். அதைப் பார்த்து வெளியார் சிலர் தங்கள் பஞ்சாங்கத்திலும் அவ்வாறே வெளியிட்டு வருகின்றனர்." திருவள்ளுவர் ஆண்டினையே தமிழர்கள் கைக்கொள்ள வேண்டுமெனக் கூறி அதனை நிலைநாட்டிய பெருஞ் செயலாளர் **மறைமலை அடிகள்** என்பதைத் தமிழ் அறிஞர் யாவரும் அறிவர். மேலும், மயிலாப்பூரிலுள்ள திருவள்ளுவர் கோயிலிலும் வைகாசி அனுடத்தன்றே திருவள்ளுவருடைய நாள் விழாவை (குருபூசையை) நடத்துகிறார்கள். பல வருடங்களாக இந்தியாவிலுள்ள திருவள்ளுவர் கழகங்கள் பல இந் நாளையே திருவள்ளுவர் திருநாளாகக் கொண்டாடி வருகின்றன. இக் காரணங்களாலேயே வைகாசி அனுடத்தை யாம் திருவள்ளுவர் திருநாளாகக் கொண்டாட முடிவு செய்தோம்.

அன்பர்கள் சிலர், இந்த இருநாளையுங் கொண்டாடினு லென்ன? என்றும், இவற்றுள் ஒருநாளை அவர் தோன்றிய நாளாகவும், மற்றதை மறைந்த நாளாகவுங் கொள்ளுதல் கூடாதோ? என்றும், இந்த இருநாட்களையும் விட்டு விட்டு வேறொரு நாளைக் கொண்டாடத் தொடங்கினுல் என்ன? என்றும், வைகாசி மாதத்தில் ஒரு நட்சத்திரத்தை ஏன் கொள்ளவேண்டும், ஒரு திகதியைக் கொண்டாலென்ன? என்றும், திருவள்ளுவர் ஆண்டைத் தை மாதம் முதலாம் நாளிலிருந்து கணிக்கிறேம், ஆதலின் அந்த நாளையே கொண்டாடினுலென்ன? என்றும் இன்னும் பலவாறும் எழுதியுளர். இவ்வாறு பலவேறு கருத்துக்களை அறிவித் தாலும் யாம் குறித்த நாளைத் தாமும் கொண்டாடுவதாகவும், எமது முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்குவதாகவும் அவர்கள் யாவரும் எழுதியுளர். அவர்களுடைய ஒற்றுமைப் பண்பும், திருக்குறட் பற்றும், கடமையுணர்ச்சியும் எமக்கு ஊக்கமளிக்கின்றன. யாம் குறித்த நாளை ஆதரித்து எழுதிய நண்பர்களும் பலராவர். இவர்கள் யாவருக்கும், எமது அறிக் கையினை வெளியிட்ட பத்திரிகைகளுக்கும் நன்றி கூறு கிறேம். எல்லோருக்கும் உகந்ததாக ஒரு நாளைத் தெரிவு செய்தல் முடியாதென்பதைக் காட்டவே அன்பர்களின் இக் கருத்துக்களை ஈண்டுக் குறிப்பிட்டோம்.

இனி, குன்றக்குடி திருவண்ணுமலை ஆதீன மகா சந்நிதானம் திருவாளர் திரு. தெய்வசிகாமணி அருணுசல தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் எமக்கு அனுப்பிய கடிதத்தில் உள்ள ஒரு பகுதியினைக் கீழே காண்க.

“திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடுவதற்குரிய காலக் குறிப்பிலே நாம் அதிகமாகக் கவனம் செலுத்தவில்லை. ஆண்டுக்கு ஒரு முறை எப்பொழுதோ ஒரு நாள் திருவள்ளு வரை நினைவு கூர்ந்து அப்பெருமகனுர் தம் அறவுணர்ச்சிகளை மக்களுக்கு உணர்த்தவேண்டும் என்பதுதான் நமது குறிக் கோளாக இருந்தது. ஆதலால் தாங்கள் முடிவுசெய்த குறிப் புப்படியே வைகாசி அனுடத் திருநாளில் கொண்டாடுதற்குத் தடை இல்லை. ஆனுல் இந்த ஆண்டிலே மாசித் திங்களில் நடப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் நடைபெற்று விட்டமையால் இந்த ஆண்டிலே மாசித் திங்களில் கொண் டாடுகிறேம். தங்களையொட்டி வைகாசி அனுடத்திலுங் கொண்டாடுகிறேம். அடுத்த ஆண்டிலிருந்து பேரறிஞர்கள் முடிவுப்படியே வைகாசி அனுடத்தில் விழாவைக் கொண் டாடுகிறேம். அன்புணர்ச்சி ஒன்றின் காரணமாகவே விழா

வைக் கொண்டாடுவதாற் காலத்திற்குரிய சிந்தனையை நாம் செய்யவில்லை. தமிழ்நாடு மட்டுமின்றி வையகமெங்கும் திருவள்ளுவர் திருநாள் கொண்டாட முயற்சி செய்வது பெரிதும் போற்றுவதற்குரிய செயல். ஒவ்வொருவர் வீட்டிலுந் திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாட வேண்டுவதும் இன்றியமையாத ஒன்றுதான்.''

மகாசந்நிதானம் அவர்களின் குறிக்கோளே நமது கழகத்தின் குறிக்கோளாகும். 'அன்புணர்ச்சி ஒன்றின் காரணமாக'த் திருக்குறளைப் போற்ற விரும்பும் மக்கள் யாவருங் கொள்ளத்தக்க சிறந்த குறிக்கோள் இஃதொன்றேயாகும். ஆதலின் தமிழ் மக்கள் யாவரையும் மகா சந்நிதானம் அவர்களைப் போலக் காலக் குறிப்பிலே கருத்தைச் செலுத்தாது இந்நாளைக் கொண்டாடுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம். இந்த நாளுடன் மாசி உத்தரத்தையும் வேறு நாட்களையுங் கொண்டாட விரும்புபவர்கள் நன்கு கொண்டாடுக.

### வீடுகளிற் கொண்டாடும் முறைகள்.

ஒவ்வொரு வீட்டிலுங் கொண்டாடவேண்டும் என்று யாம் கேட்டுக் கொண்டதைப் போற்றியும், கொண்டாடும் முறைகளைக் குறித்தும் அன்பர்கள் பலர் எமக்கு எழுதியுளர், எல்லாச் சமயத்தவரும் அன்பினலொன்றுபட்டு இன்பமாகக் கொண்டாட வேண்டுமென்பதே எமது வேண்டுகோள். தம்முடைய சமய வணக்க முறைகளையோ கொள்கைகளையோ தழுவி தமது வீடுகளிலே மொண்டாட விரும்புகிறவர்கள் அவ்வாறே கொண்டாடுக.

செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு 27 – பரல் 6-இல் (தை 53) வெளிவந்த '**திருக்குறளைப் பரப்புஞ் சீரிய வழிகள்**' எனுங் கட்டுரையினையும் அன்பர்களுக்கு நினைவூட்டுகிறோம். **குன்றக்குடி திருவண்ணுமலை ஆதீன மகாசந்நிதானம்** அவர்கள் கருத்தையும் இங்குத் தருகிறோம். ''விழாத் திருநாளன்று இல்லங்களை மெழுகிக் கோலமிட்டு, புனிதப்படுத்தி, மாவிலை தோரணம் முதலியவற்றால் அலங்கரித்துப் புனிதமான ஒரு இடத்தில் நல்லதொரு ஆசனத்தில் திருவள்ளுவர் திருமறையை வைத்து அவ்வாசிரியப் பெருமகனரைப் பற்றிய பக்திப் பாடல்களை நினைந்தோதி, அந்நூலின் கோட்பாடுகளையும் ஓதி, மலர், தூபம், தீபம் முதலியனகொண்டு பூசித்துப் பின் இயன்ற அளவு ஒரு சில பாடல்களைச் சுற்றம் சூழ இருந்து ஓதி அமைதல் வேண்டும். பின்பு சமுதாயத்தை வாழ்விக்கும் சிறந்த பணிகளுள் ஒன்றாகிய சிலருக்கு அன்னமிடல், இத் தொண்டினை அவரவர் பொருள் நிலைக்கேற்பச் செய்தல்.''

கடைசியாக வள்ளுவர் தம் தமிழ் மறையினை ஆதாரமாகக்கொண்டு எல்லோர்க்கும் பொதுவான சில முறைகளையும் குறிப்பிடுகிறோம்.

"புறந் தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப்படும்" —தமிழ்மறை 298

திருநாளன்று காலையிலே வீடுகளை மரபு முறைப்படி அழகுபடுத்துக; வீட்டிலுள்ளார் யாவரும் நீராடி நல்லுடை முதலியன அணிந்து உள்ளத் தூய்மை உடையராகுக.

"உன்னுவது எல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து" —தமிழ்மறை 596

பின்னர், திருக்குறளை உவகையுடன் எடுத்துப் பணிவுடன் அறன்வலியுறுத்தல், அன்புடைமை, அருளுடைமை முதலிய அதிகாரங்களைப் படித்துணர்க. அவற்றைக் கேட்போர் யாவருக்கும் அவற்றின் பொருளை விளக்குக. அன்பைப் பெருக்கி அருளை வளர்த்து அறநெறியிலே வாழுதற்கு முடிவு செய்க.

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்" —தமிழ்மறை 416

திருவள்ளுவமாலைப் பாடல்களையும், திருவள்ளுவரையும், திருக்குறளையும் பற்றிய பிற பாடல்களையும் உரைகளையும் படித்தும் இசைப் பாடல்களைப் பாடியும் பாடுவித்தும் மகிழ்க.

"பகுத்துண்டு பல்லுயிரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" —தமிழ்மறை 322

கடைசியாக விருந்தோம்புதல், பகுத்து உண்டு பல் உயிர்களையும் ஓம்புதல் முதலியன செய்க.

## ஊர்களிலே கொண்டாடும் முறைகள்.

காலையிலே வீடுகளிலே கொண்டாடிய பின்னர் மாலையிலே ஒவ்வொரு ஊரிலுமுள்ள கழகங்கள், சபைகள், சங்கங்கள் முதலியவற்றின் ஆதரவிலே திருக்குறள் ஊர்வலம், திருக்குறள் வகுப்புக்கள்—சொற்பொழிவுகள், பேச்சுப் போட்டிகள்—இசை விருந்துகள்–நாடக அரங்குகள் முதலியவற்றை நடத்துக. திருக்குறள் மாநாடு, திருவள்ளுவர் விழா முதலியனவற்றையும் நடத்தலாம்.

இவ்வாண்டிலே திருவள்ளுவர் திருநாள் வைகாசித் திங்கள் 15-ம் நாளாகிய வியாழக்கிழமை (28—5—53 என்பதை நினைவூட்டுகிறோம்.

"அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்" —தமிழ்மறை 443

தமிழ் மறைக் கழகம்.
44, 33-ஆம் ஒழுங்கை, கொழும்பு 6. தி. ஆ. 1984, மாசி 19

# நீத்தல் விண்ணப்பம்.

திரு. K, சோமசுந்தரம் பிள்ளை, B. A, B. L., தஞ்சை.

(முற்றொடர்ச்சி : துணர் உஎ—மலர் ச—பக்கம் 109.)

கடந்த பிறவிகளான் பெறத்தக்க பயனை, இப் பிறவி எடுத்தலானே எய்திய தில்லையெனக் கண் கூடாகக் கண்ட மாணிக்கவாசகர், தம் முயிரின் பழியும் பாவமும் தொலையும் வரை, தான், கடையவனெனக் கருதி, இடையறுது இறையை சிந்தித்து, ஆன்மாவை வீடு பெறுவித்துத் தானழியுமியல் புடைய யாக்கையினை இழித்தொழிக்கத் துணிந்தார். இத் துணிபினை நிறைவேற்ற இறையின் திருவுளம் இரங்கும் வகையில் நீத்தல் விண்ணப்பத்துப் பாக்களை அருளி முடிப் பாராயினர்.

கடவுளடை வினை கூட்டுவிக்கும் விளக்கத்தினையும் இறையுணர்வுக்குரிய ஆற்றலையும், உடல் உயிர் மனம் முதலிய வற்றில் இறக்கி உட்புற வாழ்வை மாற்றி அவைகளை முற்றிலும் இறைக்கே உரிமை யாக்குவித்தலே நீத்தல் விண்ணப்பத்தின் நோக்கமாகும். மணிவாசகப் பெருந்தகை, நீத்தல் விண்ணப்பத்தின் பாக்களின் மூலம், தனது மனம் உயிர் உடலிலே தெய்வ சக்தியை புகுத்தும் தகுதியில் நேரிடும் இடர்களை எத்தகையான் எதிர்த்து, காலத்தின் தொந்தங்களையும் பின்னுறுத்தி, தன் ஆவியும் உடலும் உடைமையெல்லாம் விடுத்து, எல்லியும் பகலும் தெய்வ சித்தியினைப் பெறத் துணியும் வகையில் தன் அனுபவ அகவொழுக்க நிலையினைப் படிப்படியாக அறிவுறுத்து வாராயினார். இவ்வண்ணம் கடவுளுண்மையினை இம் மண்ணுலகில் இறக்கி இறை நிலையினை விளக்கும் பணியில் நிற்கும் மணிவாசகர், ஆர்வம், அமைதி, பற்றின்மை, மனவுறுதி, மோன அடைக்கலம் முதலியவற்றால் தன்னை, இதயக் குகையிலுள்ள தெய்வ சக்திக்கு மலர்த்தி, இறையின் அழைப் புறுதிக்கே காட்டமுறுவாராயினார். இத் தகைய இறை யுணர்வு மனம் உயிர் உடல் முதலியவற்றின் பால் சார்புகொள்ள, உலகுணர்வில் அறிவியல்பு விளக்கமுறு மென்பதில் ஐயப்பாடிலது. இதனான் கீழியல்பிற்கு ஆளாகும், அறியாமனமும், உயிரும், உடலும், விஞ்ஞான ஆற்றலால் மாற்றமெய்தி இறை யுணர்வின்பால் ஒன்றிப்புகொண்டு முழுத் தூய்மையும் விளக்கமு முற்று ஏற்றமுறும்.

இறையுணர்வில் மூழ்கி அவ்வுணர்வின் வளர்ச்சி நிலையை காட்சி வகையான் தெளிந்து தன்னுள் இறையின் சக்தி அமைதியாகப் படிவதைக் காணும் மாணிக்கவாசகர், உயிரில் மேவிய அவாவின் மாய அழைப்பில் தான் பெற்றதை இழந்த தாக உணர்வாராயினர். மணிவாசகர் தான் எதனையும் இழக்காதிருந்தும், மயக்கி இழுக்கும் இப் பொய்த்தோற்றம் மனித வியல்பாலாகிய தெனக்கண்டு புறவுணர்வின் செயலின் அமைப்பினையும் முரண் பாட்டினையும் மறைந் தொழிய வேண்டி இறைபால் விண்ணப்பம் செய்வாராயினர்.

தனது விருப்பப்பேறு நிறைவேறுவதற்குரிய அனுபவ முண்மையினை, மாணிக்கவாசகர், முறையீட்டின்வழி, மனித வியல்பினை யியக்கும் சக்திகளை வசியப்படுத்தும் அறிவு நிலையங்களைக்கொண்டு நிலைநாட்டியுள்ளார். இதனால் உயிரின் கீழியல்புகள் மாறி மேலான தத்துவங்களோடு இணைந்து நிற்க, உயிர் தன்னை யறிந்து கட்டவிழ்த்துக்கொண்டு இறை வனிச்சையை அறநெறியாட்சியால் நிறைவேற்றி இறை நிலையினை எளிதில் பெறுகின்றது.

இவ்வணம் மாணிக்கவாசகர் தன்னை இறைவனுக் களித்து விண்ணப்பம் செய்துகொள்வதின் மூலம், தெய்வ சக்திக்குத் தன்னை மலர்த்திச் சரண்புகும் தம்மியல்புத் திறனை விளக்கி, திறவிற்குச் சிறந்த வழியினை ஒவ்வொரு திருப்பாட்டின்கண் நுட்பமுற புலப்படுத்தியுள்ளார். இத் திறவொன்றே, நீத்தற்குரியதை நீக்கி, நேர்த்தியாக்க வேண்டியதை நிறைவாக்கி, நிர்மாணிக்க வேண்டுவனவற்றை நிரலாக நிலைநாட்டுகின்றது. இதனைக் கருத்துட்கொண்டு நீத்தல் விண்ணப்பத்துப் பாக்களின் தெளிவையும் நுட்பத்தையும் ஆயும் நீர்மையர், கடவுட் கலப்பை தம்பால் மிகுதியாக்கும் ஞான அருவி பெருகியோடுவதை உணர்வர். இதனன் தானே தானான தனிப்பொருளுணர்வு வளர்ந்து மலர்வதைக் காண்பார். இத்தகைய நிலை சித்துணர்வில் திறவுற்று இறைவனுக்கு இணக்கமும் வணக்கமும் கொள்வார்க்கே ஏற்கும். இத்தகையவாறு அனுபவ முறையில் நிலைகொண்ட உண்மைகளைத் தம்பாலடக்கித் திகழும் நீத்தல் விண்ணப்பத்தின் பாக்கள் கருமயோக சாரமாக விளங்கி இறுதியில் ஆத்தும சித்திக்கு சாத்தியமாகும் நிலையில் உயிரினை உய்விக்கும் பான்மையனவாயின. எனவே மக்கள் மடமையால் திரு அழியாதும், அவாவினல் அலைப்புண்டு பாழாகாதும், இறையின்

சக்தியின் உண்மையினை ஆன்மாவின் அழைப்புறுதிகொண்டு விளக்கும் தனிவுலகை ஆக்கி, நாடப்படும் முத்தி சித்தியின் நிறையாவும் இறை விளக்கத்தின் பலனாகச் செய்தல், இப் பாக்களில் விளக்கப்படும் யோகவியலின் பொருளாகும்.

உலகுணர்வில் அறிவின தியல்பை விளக்க எழுந்த இப் பாக்கள் எவ்வண்ணம் மருட் சக்திகள், அருட்சோதி சக்திகளை வீழ்த்தித் தன்னாட்சிச் செலுத்த முயல்வதும், முடிவில் உயிர் முக்குண மாசற்று மனச் சான்றாகிய உள்ளொலியின் இயல்புடன் கலக்க அதனான் வசமாகும் அருட் சக்திகள் மேன்மேலும் ஆக்கமும் ஆற்றலுமுற்று, அழிக்கும் சக்தியை நீக்கி என்றும் நலியாது நின்று வளரும் விதியின் உண்மையினைத் திரட்டி காட்டுவனவாகும். மற்றும் முன்னேற்றத்தின் பொருட்டு அழிக்கும் சக்தியை நீத்தல், ஓரொருகால் வேண்டற்பாலதாயினும், சிற்றறிவின் அவலச் செருக்கால், ஞான நிலையிலுள்ள என்று முளதாய உண்மை ஆக்கலிலிருந்து உறும் வளர்ச்சியை ஏற்காது தள்ளுதல் அறிவுடைமைக்கு அரண் ஆதலான் நீத்தல் விண்ணப்பத்து பாக்களின் உட்கிடக்கைகளைப் பகுத்தறிவுகொண்டு நிலைநாட்டி, அவற்றை உள்ளவாறே ஆய்ந்து தெளிவடைவது சிறப்பாகுமென்க.

மணிவாசகர், உலக வாழ்க்கையைப் பற்றிய ஐம்புல இன்பத்தை ஒழித்தும், தம் மனத்தை அகமுகமாய் ஒருவழி நிறுத்தி அனுபவ முறையில் ஒழுகிய பயனால் தம்முளே சிவானந்தத் தேனூறலைக்கண்டு பருகி அதன் இனிமையினை அறிந்து உருகி இறையருட்கு அணுக்கராய் நின்றும், புவியில் வாழும் பழியால் இறைக் காட்சியினையும் அருளினையும் மீண்டும் பெறும் வாய்ப்பறியாதும், புறக்காப்பும், அகனுணர்வின்பமு மிலாதும் நைந்து வருந்தி 'நீத்தல் முறையாகாது, எனை ஆண்டருள்' என இறைபால் அவர் தம் அருட் கடமை யுண்மையினைக் குறித்து செய்யும் விண்ணப்பம், மணிவாசகரது மெய்யன்பில் திளைத்த மெய்யுணர்வு வளர்ச்சியினை வளப்படுத்தும் மாண்புடையது. மாணிக்க வாசகர் தம்முயிரையும் சித்தத்தையும் ஒரு துறைப்படுத்தி மெய்ப்பொருளைக் காணும் விடாமுயற்சியில் தாம் தமியராய் தேடிக்கொள்ள வேண்டிய முறைகளை நிலைபெற வகுத்தும், இறைவன் தம்மைக் கைவிட்டு உருக்கரந்ததாக உணர்ந்தார்.

காணுமாறு காணே னுன்னை யந்நாட் கண்டேனும்
பாணே பேசி யென்றன்னைப் படுத்த தென்ன பரஞ்சோதி
ஆணே ! பெண்ணே ! யாரமுதே ! யத்தா ! செத்தே
போயினேன்
ஏணாணில்லா நாயினேனென் கொண்டெழு கேனெம்மானே
(திருச்சதகம்)

என வருந்தினார். இறையைக் காணும் வழியால் மாணிக்கவாசகர் முதற்கண் காணாததால், ஓரோவழி இறையின்ப நிலைக்குத் தம் தகுதி போதியதாகவில்லையோ என்றும் ஐயுற்றுக் கவல்வாராயினர். எனினும் இயற்கையின் பெரும் வல்லபசக்தி இடையறாமை யென்பதினை உணர்ந்த மணிவாசகர் நீத்தல் விண்ணப்பம் என்ற பகுதியில் இறை விளக்கத்தை யோகதத்துவ இலக்கிய நயத்தோடு ஒற்றுமைப்பட விளக்குள்ளார். இப் பகுதியின்கண், மணிவாசகர் இலக்கிய இன்பினால் இழைத்த சொற்றொடர்களாகிய ஒளிவிடும் மணிகளை யோகக்காட்சி யுணர்விலாதும் அதன் நுட்பம் தேறாதும் வெறுங் கலையறிவின் பெருமிதத்து உரனால் தேய்த்துத் தேய்த்து உரைத்துக் காட்டும் திறன் அம்மணிகள் வாய்த்த உருவினை மறைத்தும், மாற்றையும் குறைக்கும் பான்மையதாகும். மாற்றறியா பசும் பொன்னுக்குப் பிறிதொரு வேற்று உலோகக் கலப்பைத் தரும் உரையான் பயன் யாதுமின்று. சொல்லும் பொருளுமென இறை சக்தியோடு இப் பாக்களில் விளங்கி இறையின்பம் கொழிப்பது, பொருணலத்தோடு அருளொளி வீசும் மணியனைய செஞ்சொற்களின் இனிப்பு தேனாக மாறி நமது நாவிலூறித் தனது தனித் தன்மையினை வெளிப்படுத்துவதால் புலனாகும். இத் தகைய இனிப்புச் சுவையின் நுகர்ச்சி அன்பினால் நிகழும் பயிற்சியோடு முன்னேற, அது வாழ்வியலை அருளொளியின்கண் புகுத்துமென்பது உறுதி. அருளொளியின் முதிர்ச்சியால் அறிவு விளக்கமுற, அறிவின் தெளிவே இறுதியில் இறைப் பேரின்பப் பெருவாழ்வில் உயிரினை இயையச் செய்யும். இதனான் இறவாத இன்பமுற உயிர் தனதன்பை இறைபால் முற்றிலும் செலுத்த பற்றறுதியினை வேண்டித் தம் ஆற்றாமையினைப் பின் எண்ணி நைந்துருகி அழுதும் தொழுதும் முறையிடல் அதற்குரிய இயல்பாகு மென்பதை மாணிக்கவாசகர் உணரப் பெற்றார்.

(தொடரும்)